# அறிமுகம் சிலிக்கன்

**தி**ருப்தி தரும் வாரம். குடும்பத் தொழில்கள் மீண்டும் முன்னேற்றமாக நடக்கும். பணவசதி பரவாயில்லை. உடல் நல பாதிப்பு ஏற்படும். தொழில், வியாபாரம் முதலியவை லாபம் தரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும். "

மேற்குறித்த 'வார பல'னைப் படிப்பதற்கு உங்களுக்கு எத்தனை செகண்டு ஆகியிருக்கும்? பத்து செகண்டா? சரி. இந்த நேரத்தில் ஒரு இயந்திரம் ஒரு வங்கியின் முன்னூறு சந்தாதாரர்களின் இரண்டாயிரம் காசோலைகளை அலசி நூறு பேஷண்டுகளின் இதயத் துடிப்பைக் கவனித்து, ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பரீட்சைத் தாள்களைச் சரி பார்த்து, ஒரு நிறுவனத்தின் ஆயிரம் தொழிலாளிகளின் சம்பளத்தைக் கணக்கிட்டிருக்கிறது.

இந்த இயந்திரத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஆசையா உங்களுக்கு? இதுவும் வார பலனைப் போல மனிதன் படைத்ததுதான். (வேண்டுமென்றால் இந்த இயந்திரம் வார பலனையும் கணித்துக் கொடுக்கும்.)

அது என்ன இயந்திரம்?

மைக்ரோ கம்ப்யூட்டர், நுண் கணிப்பொறி.

இதைப் பற்றிச் சொல்கிறேன். இதோடு மட்டுமன்றி இந்த நூலில் பல இயந்திரங்களைப் பற்றிப் பல சாதனங்களைப் பற்றிச் சொல்லப் போகிறேன். தொழிற்சாலையில், பொழுது போக்கில், விண்வெளியில், வீட்டில், படிப்பில், செய்தித் தொடர்பில் எங்கும் எங்கும் பயன்படும் இந்தச் சாதனங்களுக்கெல்லாம் ஆதாரமான ஒன்று இருக்கிறது. ஒரு சிறிய சில்லு. சிலிக்கன் சில்லு.

இந்த நாட்களில் நாம் ஒரு ஆரவாரமில்லாத புரட்சியின் மத்தியில் இருக்கிறோம். எத்தனையோ புரட்சிகளைப் பற்றி படித்திருக்கிறோம். பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி எல்லாமே மனித சரித்திரத்தை ஒருவாறு திரும்பப் பெறமுடியாமல் மாற்றியிருக்கின்றன. அதே போலத்தான் இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் மாற்றம் என்பது மிக மெல்லத்தான் நிகழும் என்று நீங்கள் சொல்லலாம். தப்பு! இன்றைக்கு நம் நாட்டில் கிராமங்களில் எல்லாம் ட்ராக்டர்களைப் பார்க்கிறோம். அதை உபயோகிக்கிறோம். இது ஒருவிதத்தில் நம் சமூக அமைப்பை மாற்றித்தான் இருக்கிறது. ட்ராக்டரின் ஏகப்பட்ட சத்தியுடன் உழவனின் புஜசக்தி போட்டியிடவே முடியாது. இதை ட்ராக்டரை உபயோகிப்பவன், அவன் படிக்காதவனாக இருந்தாலும் உணர்ந்து கொண்டு அதற்காக தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறான். அதனுடன் போட்டியிட்டு பிரயோசனமில்லை. அதைச் சரிவர உபயோகிக்க வேண்டும் என்கிற மனோ நிலைக்கு இந்திய விவசாயி தன்னை மாற்றிக் கொண்டு விட்டான். இதை ஒரு பெரிய மாறுதலாக நான் சொல்வேன். உடல் சக்திக்கு ட்ராக்டர் போல மனோசக்திக்கு இந்தக் கம்ப்யூட்டர் வந்து கொண்டிருக்கிறது.

**க**ம்ப்யூட்டர் என்கிற சொல்லையாவது நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்கள் மனதில் அந்தச் சொல் என்ன தோற்றுவிக்கிறது என்று சற்று நேரம் யோசித்துப் பாருங்கள். கம்ப்யூட்டரைப் பற்றித் தெரிந்தவர்கள், முழுவதும் தெரிந்தவர்கள் மிகச் சிலர் இருக்கிறார்கள். விற்பன்னர்கள், அதிர்ஷ்டம் பண்ணியவர்கள், அறிவாளிகள் இத்யாதி. இவர்களை விட்டு விடுவோம்.